17.04.2026

அ.வ.எண்.50/2021

வா.சா. 2 மஞ்சன் குறுக்கு விசாரணை

1. வாதி தசரதன் வீட்டில்தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் பிறந்து வளர்ந்தது மங்களம் கிராமம் ஆகும். வாதி தசரதன் வீடு சம்பந்தமாக எங்கள் ஊரில் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன பஞ்சாயத்து எதற்காக ஏற்பட்டது என்றால் வாதி தசரதன் வீட்டின் சொத்தில் நான் உரிமை கோரியதால் ஏற்பட்டது. மேற்சொன்ன பஞ்சாயத்து முடிவில் வாதி தசரதன் வீட்டில் நான் குடியிருக்கலாம் என்று கூறிவிட்டனர் என்றால் சரிதான். அதனால்தான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தசரதன் அரசு திட்டத்தின் கீழ் வீடு கட்டியுள்ளார் என்று கூறியுள்ளேன், எந்த திட்டத்தின் கீழ் கட்டியுள்ளார் என்றால் கலைஞர் வீட்டு திட்டத்தின் கீழ் கட்டியுள்ளார்.

2. கலைஞர் வீட்டு திட்டத்தின் கீழ் வாதி வீடு கட்டியுள்ளார் என்பதற்கு ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவாசொத்து பட்டா சொத்தா அல்லது புறம்போக்கு சொத்தா என்றால் தாவா சொத்து முதலில் நத்தம் புறம்போக்காக நிலமாக இருந்தது, தற்போது பட்டா நிலமாக உள்ளது. எத்தனை வருடத்திற்கு முன்பு புறம்போக்கு நிலம் பட்டா நிலமாக மாறியது என்றால் சுமார் 3 1/2 வருடத்திற்கு முன்பு இருக்கும். கலைஞர் வீட்டு திட்டத்தின் கீழ் எத்தனை வருடத்திற்கு முன்பு வாதி வீடு கட்டினார் என்றால் சுமார் 20

ஆண்டுகளுக்கு முன்பு இருக்கும். புறம்போக்கு சொத்திற்கு அரசாங்கம் இலவச வீடு கட்டி ஒதுக்காது என்றால் சரியல்ல.

3. நான் தங்கியிருக்கும் வாதி தசரதன் வீடும் கலைஞர் வீட்டு திட்டத்தின் கீழ் கட்டபட்ட வீடு என்றால் சரிதான். மேற்சொன்ன வீட்டை தான் தாவாசொத்தில் அமைந்துள்ள வீடு என்று நினைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வேலாயுதம் எங்குள்ளார் என்றால் நடுத்தெருவில் வசித்து வருகிறார், அவர் தாவாசொத்தின் அருகில் இல்லை என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள ஜக்குபந்தியின் விவரங்கள் அனைத்தும் வாதி சொல்லிதான் தெரியுமா என்றால் இல்லை, எனக்கு தெரியும். நான் வாதியின் வீட்டில் குடியிருப்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**17.04.2026**
**அசல் வழக்கு எண்.50/2021**
**வா.சா.ஆ.3 சரண்ராஜ் குறுக்கு விசாரணை**

1. வாதி தசரதன் என்பவருக்கு நான் என்ன உறவு என்றால் மச்சான் உறவு ஆவேன். நான் எந்த வருடம் வாதி தசரதனின் தங்கையை திருமணம் செய்தேன் என்றால் 2008ம் வருடம் திருமணம் செய்தேன். திருமணத்திற்கு முன்பு மற்றும் பின்பும் நான் மங்களம் கிராமத்தில்தான் குடியிருந்து வந்தேன். எனது பிரமாணவாக்குமூலத்தில் மத்திய அரசு திட்டத்தின் கீழ் வாதி கழிப்பறை கட்டியுள்ளார் என்று கூறியுள்ளேன், எந்த திட்டத்தின் கீழ் கட்டியுள்ளார் என்றால் கலைஞர் திட்டத்தின் கீழ் கட்டியுள்ளார், எனவே எனது பிரமாணவாக்குமூலத்தில் மத்திய அரசு என்று கூறியிருப்பது தவறு என்றால் சரிதான்.

2. கலைஞர் திட்டத்தின் கீழ் கட்டியதாக கூறியுள்ளதற்கு ஆவணங்கள் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி பெயரில் உள்ள பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த வருடம் வாதிக்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் கடந்த வருடம் வழக்கு நிலுவையில் உள்ள போதுதான் பட்டா வழங்கினார்கள். எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள ஐக்குபந்தியில் கிழக்கிலும் வடக்கிலும் கிராமநத்தம் காலி மனை என்றால் சரிதான். பிரதிவாதி எந்த தெருவில் வசித்து வருகிறார் என்றால் நடுத்தெருவில் வசித்து வருகிறார். நான் வாதியின் சகோதரியின் கணவர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.